# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 09.11.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் பக்கராவின் 149 வது வசனத்தை ஓதினார்கள்:**

*இந்த வசனத்தின் பொருள்: ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அவர் அதனிடத்து தனது முழு கவனத்தையும் செலுத்துகிறார். எனவே நீங்கள் நல்லவற்றில் ஒருவரையொருவர் முந்திக் கொள்ள முயலுங்கள். நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ் உங்களை ஒன்றுசேர்ப்பான். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின் மீதும் முழுமையான ஆற்றல் பெற்றவனாவான். (2:149)*

இந்த வசனத்தில் இறைவன் ஒரு கட்டளையை வழங்கியுள்ளான். இது ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் எல்லா வகையான முன்னேற்றத்திற்கும் அவசியமாகும். அதாவது இறை விருப்பத்தைப் பெறுவதற்கான வழியாக அமைகின்ற முன்னேற்றத்திற்கு இது அவசியமாகும். முஸ்லிம் என்று தம்மை கூறிக் கொள்பவரை இது உண்மையான முஸ்லிமாக்குகிறது. ஜமாஅத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இது அவசியமாகும். அந்த கட்டளை யாதெனில், ஒரு உண்மையான முஸ்லிமின் உண்மையான மூஃமின்களின் ஒரு ஜமாஅத்தின் குறிக்கோள் நன்மையில் முன்னேறுவதாக இருக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: உலகில் கோடிக்கணக்கான மக்கள் வாழ்கின்றனர். ஒவ்வொருவருக்கென்றும் வாழ்வில் ஒரு குறிக்கோள் உள்ளது. அதைப் பெறுவதற்கு அவர் முயற்சி செய்கிறார். ஒருவர் தன் நோக்கத்தை அடைய முயற்சிக்கிறார் என்றால் இன்னொருவர் தனது இன்னொரு நோக்கத்தை அடைய முயற்சிக்கிறார். இன்னும் சொல்வதென்றால் தீமைகள் செய்பவர்களுக்கும் சில குறிக்கோள் உள்ளது. அதை அடைவதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர். அந்த குறிக்கோள் பிறருக்கு தீங்கு விளைவிப்பதாகவும் இழப்பை ஏற்படுத்துவதாகவும் இருந்தாலும் சரி, உதாரணமாக ஒரு திருடன் தனது நாளின் பெரும் நேரத்தை நான் இரவு எங்கெல்லாம் திருட வேண்டும். எப்படி திருட வேண்டும் என்று திட்டமிடுவதில் கழிக்கின்றான் அல்லது கொள்ளைக்காரர்கள் தாம் கொள்ளையடிக்க வேண்டும் என்ற தமது நோக்கத்தை அடைவதற்காக பல திட்டங்களை வகுக்கின்றனர். சிலர் நன்மை மற்றும் மார்க்கம் என்ற பெயரில் அநீதியிழைப்பதையே தமது குறிக்கோளாக ஆக்கியுள்ளனர். இதற்காக அவர்கள் திட்டங்களை தீட்டுகின்றனர். ஒரு பாவமும் அறியாத குழந்தைகளுக்கு இதற்காக பயிற்சி அளிக்கின்றனர். இதற்காக பணத்தையும் நேரத்தையும் செலவு செய்கின்றனர். குழந்தைகளின் சிந்தனைகளை ஒரு நீண்ட பயிற்சியின் மூலம் சுயமாக சிந்திக்கவும், புரிகின்ற தன்மையையும் அழித்து அவர்களின் மூலம் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்துகின்றனர். தீவிரவாத தாக்குதல்களை நடத்தி அப்பாவி உயிர்களைக் கொல்கின்றனர். துரதிஷ்டவசமாக இவ்வாறு அநியாயம் இழைப்பவர்களின் பெரும்பான்மையினர் தம்மை முஸ்லிம் என்று கூறுபவர்களாகவே இருக்கின்றனர்.

மார்க்கம் என்ற பெயரில் இவ்வனைத்து குழப்பங்களையும் அநீதிகளையும் வரம்பு மீறல்களையும் நடத்துகின்றனர். அப்பாவி உயிர்களின் இரத்தத்தில் இவர்கள் விளையாடுகின்றனர். இவ்வாறு இஸ்லாத்தின் அழகிய போதனைக்கு அவப்பெயர் ஏற்படுத்துகின்றனர். இவர்கள் முஸ்லிம்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர். எல்லா நன்மைகளிலும் முன்னேற வேண்டும் என்பதையே இறைவன் இந்த மார்க்கத்தை பின்பற்றுபவர்களுக்கு குறிக்கோளாக வழங்கியுள்ளான். அதாவது எல்லாவிதமான நன்மைகளிலும் முன்னேறுவது உங்களது நோக்கமாக இருக்க வேண்டும். ஏதாவதொரு நன்மையைப் பெறுவது மட்டும் குறிக்கோள் அல்ல. மாறாக, எல்லா வகையான நன்மையையும் செய்து அதில் முன்னேறுவது உங்களது நோக்கமாக இருக்க வேண்டும். உங்களது இந்த குறிக்கோள் இறைவன் புறமிருந்து நிர்ணயிக்கப்பட்ட ஒன்றாகும்.

எல்லா வகையான நன்மையைப் பெறுவதும் உங்களது குறிக்கோளாகும். அப்போது தான் நீங்கள் உண்மையான மூஃமினாக கருதப்படுவீர்கள். அல்லாஹ் கூறுகிறான்: ஒவ்வொருவருக்கும் ஒரு குறிக்கோள் உள்ளது. அதன் பக்கம் அவர் கவனம் செலுத்துகிறார். அதை அவர் தனது நோக்கமாக ஆக்கிக் கொள்கிறார். ***விஜ்ஹதுன்*** என்பதன் பொருள், திசை, வழி, பாதை என்பதாகும். இதன் பொருள்: குறிக்கோளை அடைவது என்பதும் ஆகும். எனவே அல்லாஹ் எதன் பக்கம் பார்க்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளானோ அதன் பக்கம் பார்க்க வேண்டும் என்பது ஒரு மூஃமினுக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனையாகும். அதன் பக்கம் பார்ப்பது மட்டுமின்றி, அவர் பார்க்கின்ற திசையில் பல வழிகள் உள்ளன. அதில் எந்த வழியை கடைபிடிக்க வேண்டுமென்று இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அந்த வழியைக் கடைபிடிக்க வேண்டும். அந்தப் பாதையில் முகத்தைக் தூக்கிக் கொண்டு போய்க்கொண்டே இருக்கக் கூடாது. மாறாக அந்த வழியில் நடப்பது ஒரு குறிக்கோளை அடைவதற்காக இருக்க வேண்டும். அந்த குறிக்கோள் இறைவன் நமக்காக நிர்ணயித்த குறிக்கோளாக இருக்க வேண்டும். அதாவது நன்மைகளை செய்வது மட்டுமின்றி அதன் தரங்களை உயர்த்துவதும் ஆகும். மேலும் இந்த நன்மைகளைச் செய்வதில் ஒருவருக்கொருவர் முந்த முயற்சி செய்ய வேண்டும். ஒருவர் மற்றவரை விட முந்துவது மட்டுமின்றி பலவீனமானவர்கள், பின்தங்குபவர்கள் ஆகிய மக்களையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும். அதாவது ஜமாஅத்தின் வளர்ச்சியும் ஒரு மூஃமினுக்கு எல்லா நேரமும் நோக்கமாக இருக்கிறது. எனவே தான் வளர்ச்சியடையும் போது ஜமாஅத்தின் பிற உறுப்பினர்களின் வளர்ச்சிக்காகவும் பாடுபடுபவர்தான் உண்மையான மூஃமின் ஆவார். நன்மையின் ஓட்டத்தில் அவர்களையும் தம்முடன் சேர்த்துக் கொள்கிறார். அவர்களும் முன்னேற வேண்டும். இதனால் ஜமாஅத்தின் வளர்ச்சி என்ற சக்கரம் வேகமாக முன்னேற்றத்தின் பக்கம் சுழன்று கொண்டேயிருக்க வேண்டும்.

அஹ்மதிய்யா ஜமாஅத் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பருடன் இணைந்ததன் காரணமாக, ரஸூல் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த நன்மையை நிலைநாட்டவே தோன்றிய ஜமாஅத்தாகும். இந்த நன்மையில் அல்லாஹ்வுக்கு ஆற்ற வேண்டிய உரிமைகளும் உள்ளன. இறையடியார்களுக்கு ஆற்ற வேண்டியவையும் உள்ளன. இறை வணக்கங்களும் உள்ளன. மேலும் இந்த நன்மையில் இறை படைப்பினங்கள் மற்றும் முழு உலக மனித இனத்திற்கு ஆற்றும் தொண்டும் உள்ளடங்கும். ஏனெனில் ரஸூல் (ஸல்) அவர்களை அல்லாஹ் முழு மனித இனத்திற்கும் கருணையாக அனுப்பினான். மனித நேயத்திற்கு தொண்டாற்றும் கடமையை நன்மைகளைப் பரப்புவதால் தான் செய்ய முடியும். கருணையை பரப்புவதால் தான் செய்ய முடியும். நான் முன்பு ஒரு உதாரணம் கூறினேன். சிலர் தீமைகளை தாமும் செய்வதுடன் குழந்தைகளுக்கும் அதற்கான பயிற்சி அளிக்கின்றனர். அப்பாவி உயிர்களைக் கொல்வதற்காக அந்த குழந்தைகளைப் பயன்படுத்தி தற்கொலை தாக்குதல்கள் நடத்துவதால் இதை செய்து விட முடியாது. குண்டுகள், பீரங்கிகள் மற்றும் சண்டை சச்சரவுகளால் குழப்பங்களால் இந்த சேவையைச் செய்து விட முடியாது.

இன்று உலகத்தில் ஜமாஅத் என்ற அளவில் அகில உலகிற்கும் அருட்கொடையாக வந்தவரின் அருளிலிருந்து உலகிற்கு பகிர்ந்து கொடுக்கவும், நன்மைகளை பரப்புவதிலும் எல்லா நேரமும் ஈடுபட்டு வருகின்ற ஒரே ஜமாஅத் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் மட்டுமே ஆகும். இதற்கான உரிமையை அது நிறைவேற்ற முழுமையாக முயற்சி செய்கிறது. இந்த முயற்சி இஸ்லாத்தின் அழகிய போதனை, இஸ்லாத்தின் தூதுச் செய்தி ஆகியவற்றை உலகிற்கு வழங்கியும் நடைபெறுகிறது. திருக்குர்ஆனை பரப்புதல் மற்றும் உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்து அதை அந்தப் பகுதிகளில் பரப்புவதன் வடிவிலும் நடைபெறுகிறது. உலகிற்கு உயரிய நல்லொழுக்கத்தை கற்பிப்பதன் வடிவிலும் இந்த முயற்சி நடைபெறுகிறது. உலகிற்கு அன்பு மற்றும் நேசத்தைப் போதிக்கும் வடிவிலும் நடக்கிறது. மனித நேயத்திற்கு தொண்டு செய்தல் மருத்துவமனைகளில் துக்கத்தால் வாடுகின்ற நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வடிவிலும் நடைபெறுகிறது. உலகின் தொலை தூரப் பகுதிகளில் கல்வியறிவின்றி வாடும் குழந்தைகளுக்கும், மக்களுக்கும் கல்வியின் அணிகலன்களைக் கொண்டு அலங்கரித்து அவர்களுக்கு நன்மையின் சரியான அறிவைப் புகட்டுவதன் வடிவிலும் இந்த சேவை நடைபெறுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக ரஸூல் (ஸல்) அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வந்து ஓரிறைவன் முன் குனிபவர்களாக அம்மக்களை மாற்றுகின்ற வடிவிலும் நடைபெறுகிறது.

எனவே ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் Mission ஒரு சாதாரண Mission அல்ல. நாம் இக்காலத்தின் இமாமுடன் செய்த உடன்படிக்கை ஒன்றும் சாதாரண உடன்படிக்கை அல்ல. இதை நிறைவேற்றுவதற்காக நாம் நமக்காக இறைவன் நிர்ணயித்த அதே குறிக்கோளை நமது இலக்காக ஆக்கிக் கொள்ள வேண்டும். இதைப் பற்றி நான் ஓரளவு விளக்கிக் கூறியுள்ளேன். அதாவது அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக இறைவன் பக்கம் நம்மை இட்டுச் செல்லும் வழிகளில் நடப்பது அவசியமாகும். இந்த வழிகளிலும் சய்த்தானை நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டியது வரலாம். இதை சைய்த்தான் முன்னதாக கூறியுள்ளான். அவன் நன்மைகள் செய்வதை விட்டு தடுக்க முயற்சி செய்வான். நன்மைகளின் தரத்தை உயர்த்துகின்ற முயற்சியில் தடைகளை ஏற்படுத்துவான். ஆனால் *இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லஸீன அன்அம்த அலைஹிம்* என்ற துஆ உள்ளத்திலிருந்து எழுந்தால், அது சய்த்தானின் தாக்குதலை முறியடித்துக் கொண்டே செல்லும். இதனால் நன்மைகளின் உச்சநிலைகளை ஒரு மூஃமின் அடைந்து கொண்டே செல்வார். சிறந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டே இருப்பார். எனவே இதைப் பெறுவதற்காக நமது ஒவ்வொரு பெரியவரும், சிறியவரும், ஆணும், பெண்ணும், குழந்தைகளும், வயது முதிர்ந்தவரும் ஆகிய அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். எல்லா வகையான நன்மைகளையும் கடைபிடித்து அல்லாஹ் நமக்காக நிர்ணயித்த குறிக்கோளைப் பெற வேண்டும். அதற்காக முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் சில நன்மைகளை கடைபிடிக்குமாறு மூஃமின்களுக்கு கட்டளையிடுகிறான். அதில் ஒன்று, இறைவழியில் பொருள் தியாகம் செய்தல் என்ற நன்மையாகும். நான் முன்னதாக கூறிய குறிக்கோள்களை அடைவதற்கு பொருள் தியாகம் செய்வது அவசியமாகும். அதாவது இஸ்லாத்தைப் பரப்புவது மற்றும் மனிதநேயத்திற்கு தொண்டாற்றுவது ஆகும்.

கடந்த ஏறக்குறைய 125 வருடங்களாக இந்த குறிக்கோள்களை அடைவதற்கு ஜமாஅத் உறுப்பினர்கள் பொருள் தியாகங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் வரலாறு சாட்சியாகும். இந்த தியாகம் மற்றும் நன்மை ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் தனிச் சிறப்பாகும். இதைப் பார்த்து அந்நியர்கள் கூட ஆச்சரியமடைகின்றனர். ஏனெனில் இந்த தியாகங்களுக்குப் பின்னணியில் என்ன உணர்வு செயல்படுகிறது என்பதை புரிந்து கொள்ளும் திறன் அவர்களுக்கு இல்லை. நிச்சயமாக ஓர் அஹ்மதியிடம் இந்த ஆன்மா பிறப்பதற்கான காரணம், அவர் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப நன்மையில் முன்னேறுவதையே தமது குறிக்கோளாக ஆக்கிக் கொண்டார். எனவே இன்று பூமியில் அஹ்மதிகளாகிய நீங்கள் தான், *கைரில் மக்லூபி அலைஹிம் வலழ்ழாள்ளீன்* என்பதை மெய்ப்பித்து நன்மையில் நிலைத்திருக்கிறீர்கள். நன்மைகளைப் பெறுதல் மற்றும் அதில் முன்னேறுதல் ஜமாஅத்தின் வளர்ச்சி மற்றும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலை முடுக்குகள் வரை கொண்டு சேர்ப்பது ஆகிய பணிகளுக்காக உங்களுடைய உயிர், பொருள், நேரம் மற்றும் கண்ணியத்தை தியாகம் செய்து கொண்டே இருப்பவர்களாவீர்கள். எந்த எதிரியும் எந்த சக்தியும் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் முன்னேற்றத்தை தடுக்க முடியாது.

எந்த அரசாங்கமும் எந்த கூட்டமும் நமது முன்னேற்றத்தின் வேகத்தை நம்மில் நன்மையில் முன்னேற வேண்டும் என்ற ஆன்மா இருக்கும் வரை தடுக்கவோ குறைக்கவோ முடியாது. ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை நேசரை நாம் ஏற்றுக் கொண்டு இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்கு அங்கமாக இருப்போம் என்று வாக்குறுதி வழங்கியுள்ளோம். இந்த வாக்குறுதி இன்சா அல்லாஹ் நம்மில் நன்மைகளில் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற உணர்வை குறைத்து விடாது. நன்மையில் முன்னேறுகின்ற உணர்வு மற்றும் தியாகத்தின் உயிரைக் கண்டு சிலநேரம் நமக்கே ஆச்சரியமாக இருக்கிறது. நானும் ஆச்சரியம் அடைகிறேன். எவ்வாறெல்லாம் தியாகம் செய்யும் மக்கள் உள்ளனர்! இவர்கள் நன்மையை செய்யும் மக்களாவர். உறுதியான மனப்பான்மையுடன் இதில் நிலைத்திருப்பவர்களாவர். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு தூயவர்களை வழங்கியுள்ளான். இந்த ஜமாஅத்திற்கு வழங்கியுள்ளான். அவர்கள் நிரந்தர மனப்பான்மையுடன் தியாகங்கள் செய்து கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் ஃபஸ்தபிக்குல் கைராத் – நன்மையில் ஒருவருக்கொருவர் முந்துங்கள் என்பதன் உண்மைத்துவத்தைப் புரிந்து கொண்டார்கள். ஃபஸ்தபிக் என்றால் தொடர்ச்சியாக முன்னேறுதல், இஸ்திபாக் என்றால் நிரந்தரமாக முன்னேறிக் கொண்டே செல்தல் என்று பொருள். இதற்காக முயற்சி செய்து கொண்டே இருத்தல். இவ்வாறு முன்னேறுவது நமது ஜமாஅத்தின்

உறுப்பினர்களிடம் பல்வேறு வடிவில் நமக்குத் தென்படுகிறது. இதில் நான் முன்னதாகக் கூறியது போன்று பொருள் தியாகமும் ஆகும்.

ஒவ்வொரு வருடமும் அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத் இந்த குறிக்கோளுக்காக தியாகம் செய்து வருகிறது. இதில் புதிதாக சேர்ந்துள்ள அஹ்மதிகளும் உள்ளனர். பழைய அஹ்மதிகளும் உள்ளனர். ஏழைகளும் உள்ளனர். நடுத்தர மக்களும் உள்ளனர். இவர்களில் யாருக்கெல்லாம் பொருள் தியாகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி உணர்த்தப்பட்டதோ அவர்கள் அனைவரும் நன்மையில் முன்னேற முயற்சி செய்கிறார்கள். குறைவு உள்ளது என்றால் அது உணர்த்துபவர்களிடமே உள்ளது. ஜமாஅத்தின் உறுப்பினர்களிடம் உள்ள பரிசுத்த தன்மையில் அல்லாஹ்வின் அருளால் எந்த குறைவும் இல்லை. ஜமாஅத் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ஏற்கனவே நான் கூறியது போன்று குறைந்த வருமானம் உடையவர்களாவர். எனவே தியாகம் புரிபவர்களின் எண்ணிக்கையும் இவர்களில் தான் அதிகம் உள்ளது. இவர்கள் தமது பல விருப்பங்களை தியாகம் செய்து பொருள் தியாகத்தில் பங்கெடுக்கின்றனர். சிலர் பொருள் வசதி கொண்டவர்களும் உள்ளனர். இவர்களும் பெரும் பெரும் தியாகங்கள் புரிகின்றனர். எனினும் குறைந்த வருமானம் கொண்டவர்களுடன் இவர்களை ஒப்பிடும் போது தியாகத்தின் தரம் என்ற அடிப்படையிலும் எண்ணிக்கையின் அடிப்படையிலும் மிகக் குறைவாகும்.

இப்போது மேற்கத்திய நாடுகளில் வசிக்கும் அஹ்மதிகளுக்கு அல்லாஹ் மிக அதிகமாக வழங்கியுள்ளான். அல்லது பெரும்பான்மையான எண்ணிக்கையில் அஹ்மதிகளை அல்லாஹ் முன்பை விட நல்ல நிலைக்கு கொண்டு வந்திருக்கிறான். அவர்களுக்கு மிகுதியாக வழங்கியுள்ளான். இவர்கள் தமது தியாகத்தை மட்டும் பார்க்கக் கூடாது அல்லது தமது தியாகத்தின் தொகையைக் கண்டு அதிலேயே திருப்தி கொண்டு விடக் கூடாது. மாறாக இவர்கள் ஓராண்டில் கொடுத்த தியாகங்களில் அடுத்த ஆண்டு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். முன்னேற்றம் ஏதுமில்லாமல் அங்கேயே நிற்கிறது என்றால் கவலைப்பட வேண்டும்.

நான் முன்னதாக கூறினேன். அதாவது பொதுவாக ஓர் அஹ்மதி ஒருவருக்கொருவர் முந்துவதற்கான உணர்வைப் புரிந்துள்ளார். இதற்காக முயற்சி செய்கிறார். ஜமாஅத்தில் நிரந்தரமான சந்தாக்களைத் தவிர பிற திட்டங்களும் அவ்வப்போது அறிவிக்கப்படுகின்றன. இதற்காகவும் ஜமாஅத் உறுப்பினர்கள் பெரும் அளவில் தியாகம் செய்கின்றனர். சில திட்டங்கள் சில ஜமாஅத்தின் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக செய்யப்படுகின்றன. சில திட்டங்கள் அந்த நாட்டின் ஏதாவது தேசிய புராஜெக்டிற்காக செய்யப்படுகின்றன. பல நாடுகளில் மத்திய திட்டத்தின் கீழ் பள்ளிவாசல்கள் அல்லது பிற திட்டப்பணிகள் நடைபெறுகின்றன. ஏனெனில் இந்த தேவைகளை நிரந்தரமான கட்டாய சந்தாக்களால் மட்டும் நிவர்த்தி செய்ய முடியாது. எவ்வாறிருப்பினும் நிரந்தரமான சந்தாக்கள் தவிர ஜமாஅத் உறுப்பினர்கள் பெரும் தியாகம் செய்கின்றனர். பெரும்பாலன எண்ணிக்கை இவ்வாறு தியாகம் செய்யக் கூடியதாகும்.

இங்கு ஒரு விசயத்தை நான் விளக்க விரும்புகிறேன். தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதின் சந்தாக்கள் அனைத்தும் மர்கஸின் சந்தா (மேலிட சந்தா) வாகும். இந்தத் தொகை உள்ளூர் அல்லது உள்நாட்டு தேவைகளுக்காக செலவிடப்படுவதில்லை. அல்லது சில ஏழை நாடுகள் இந்த சந்தாவை உள்நாட்டில் செலவு செய்கின்றார்கள் என்றாலும் அவர்கள் சுதந்திரமாக செய்வதில்லை. மாறாக மேலிடத்தின் அனுமதி பெற்று செலவு செய்யப்படுகிறது. சில நேரம் சில பணக்கார நாடுகளிலுள்ள மக்களின் மனதில் இந்த சிந்தனை எழுகிறது. அதாவது இந்த சந்தாக்கள் மேலிடத்தின் சந்தாக்கள்; இது நமக்காக செலவு செய்யப்படுவதில்லை. எனவே இதில் நாம் ஏன் அதிகமாக பங்கெடுக்க வேண்டும்? நமக்கு சில திட்டப்பணிகள் உள்ளன. நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். உள்ளூர் புராஜெக்ட்ஸ் மற்றும் சில நேசனல் புராஜெக்டும் இருக்கின்றது. முதலில் நாம் நமது செலவுகளை பூர்த்தி செய்யலாம் என்ற சிந்தனை எழுகின்றது.

இதில் முதல் விசயம் என்னவென்றால் அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதற்காக கொடுக்கின்றீர்கள் என்றால் இவ்வாறான கேள்வியே தவறாகும். இரண்டாவது, மேலிடத்திற்கு பெருமளவில் செலவுள்ளது. பல திட்டப் பணிகள் உள்ளன. ஏழை நாடுகளில் அதாவது அதில் ஆப்பிரிக்க நாடுகளும் உள்ளன. ஆசியாவின் நாடுகளும் உள்ளன. இந்தியா, வங்காள தேசம் ஆகியவற்றையும் சேர்த்து இன்னும் சில நாடுகள்

உள்ளன. ஐரோப்பாவிலும் ஜமாஅத் உறுப்பினர்கள் மிகவும் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட நாடுகளும் உள்ளன. இந்த நாடுகளில் மேலிடத்தின் புறமிருந்து செலவு செய்யப்படுகின்றன. அவ்வாறே திறமையான நமது மாணவர்களின் கல்விக்கான செலவுகளும் மேலிடம் செய்து வருகிறது. ஜமாஅத்துகளிலிருந்து மேலிடத்திற்கு வருகின்ற தொகையிலிருந்து இந்த செலவுகள் செய்யப்படுகின்றன.

பிறகு நன்மையில் ஒருவருக்கொருவர் முந்த வேண்டும் என்ற ஆன்மா இதுவாகும். அதாவது தமது ஏழை சகோதரர்களை, சிறிய ஜமாஅத்துகளை, பலவீனமான ஜமாஅத்துகளையும் உடன் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதாகும். இதனால் அல்லாஹ்வின் முன்னிலையில் மகிழ்ச்சிக்குரியவர்களாக இருப்போம். நாம் நமது பலவீனமானவர்களையும் நம்முடன் அழைத்துச் செல்வதற்கு முயற்சி செய்து வந்தோம் என்று மகிழ்ச்சி அடையலாம்.

நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் தொடர்ந்து கூறுகிறான்: நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ் உங்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டுவான். அதாவது ஒன்றுசேர்ந்து அல்லாஹ்வின் முன் ஆஜராகும் போது நன்மையில் முன்னேறுவதற்கான ஆன்மாவை நிலைநிறுத்தியவர்கள் மகிழ்ச்சியாக இருப்பர். ஆனால் இதில் சோம்பேறித்தனத்தை காட்டியவர்கள் பிறருக்கு உதவி செய்யத் தயங்கியவர்கள் நாங்கள் பிறருக்காக ஏன் செலவு செய்ய வேண்டும்? என்ற கேள்வியை எழுப்புபவர்கள் பதில் சொல்லி ஆக வேண்டும். எனவே இந்த கேள்வியை ஆங்காங்கே ஓரிருவர் எழுப்பினாலும் சரி, இந்த கேள்வி ஓர் அஹ்மதிக்கு கொடுக்கப்பட்ட போதனைக்கு எதிரானதாகும். இதையே இறைவன் நம்மிடம் எதிர்பார்க்கிறான்.

மேலிடத்தின் செலவுகளைப் பற்றி நான் இப்போது உங்களுக்கு கூறினேன். இதன் சுருக்கமான அட்டவணையையும் உங்கள் முன் எடுத்து வைக்கிறேன். இதனால் உலகத்தின் ஒவ்வொரு ஜமாஅத்தும் தமது சொந்த வசதிகளை மட்டும் சார்ந்து இல்லை. மாறாக, பல செலவுகள் மேலிடத்தின் கிரேன்டு (ஒதுக்கீடு) என்ற வடிவில் உலகிற்கு கொடுக்கப்படுகிறது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தத் தொகை மேலிடத்திற்கு வருகின்ற சந்தாக்களிலிருந்து தரப்படுகின்றது. உதாரணமாக, ஆப்பிரிக்கா தவிர பிற நாடுகளின் உதவியால் செயல்படும் நாடுகள் 68 ஆகும். இதில் ஆப்பிரிக்காவின் 27 நாடுகளும், ஐரோப்பாவின் 18 நாடுகளும், ஆசியா மற்றும் தூரக்கிழக்கு நாடுகளில் 15 நாடுகளும் வட அமெரிக்காவின் 6 நாடுகளும் மற்றும் தென் அமெரிக்காவின் 2 நாடுகளும் அடங்கும். இவ்வாண்டு ஒரு பெரிய தொகை அங்குள்ள பள்ளிவாசல்கள் மற்றும் மிசன் ஹவுஸ்கள் கட்டுவதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள், ரேடியோ, டி.வி. நிகழ்ச்சிகள் ஆகியவற்றிற்காக ஏறக்குறைய மூன்று மில்லியன் பவுண்டு இந்தப் பணிகளுக்காக மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர வழக்கத்தை விட அதிகமக திட்டப்பணிகள் சில இடங்களில் நடந்து வருகின்றன.

Mission House –களின் விரிவாக்கத்திற்காக நமது மிசன்கள் இருக்கும் இடங்களில் உதாரணமாக ஆப்பிரிக்காவின் நாடுகளுக்கு மேலிடத்தின் கிரேண்டு (ஒதுக்கீடு) அனுப்பப்படுகிறது. அங்கு 35 நாடுகளில் 178 மேலிடத்தின் முபல்லிக்குகள் உள்ளனர். 1000 உள்ளூர் முஅல்லிம்களும் உள்ளனர். இவர்களின் பெரும் செலவை மேலிடம் செய்கிறது. இது தவிர 41 நாடுகளுக்கு மேலிடத்திலிருந்து கிரேண்டு அனுப்பப்படுகிறது. இங்கும் நமது முபல்லிக்குகளின் எண்ணிக்கை 243 ஆகும். உள்ளூர் முஅல்லிம்களின் எண்ணிக்கை 928 ஆகும். பல பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அயர்லாந்தில் பள்ளிவாசல் கட்டப்படுகிறது. இதில் அயர்லாந்து ஜமாஅத் பெரும் பங்கு செலவு செய்கிறது. எனினும் ஏறக்குறைய 50% வரை செலவுகளை மேலிடம் கொடுக்கிறது. ஸ்பெயினில் வலன்ஷியாவில் பள்ளிவாசல் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அங்கு ஏறக்குறைய 80% மேலிடம் செலவு செய்கிறது. உகாண்டாவில் பாலாவில் பள்ளிவாசல் விரிவாக்கப் பணிகள் நடக்கின்றன. அந்த செலவை ஏறக்குறைய முழுமையாக மேலிடம் செய்கிறது. ஐவரிகோஸ்ட்டில் மேலிடத்தின் சார்பாக பள்ளிவாசல் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆப்பிரிக்காவின் 19 நாடுகளில் 99 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளன. 46 Mission House –கள் கட்டப்பட்டுள்ளது. இதில் ஏறக்குறைய 65 பள்ளிவாசல்கள் கட்டுவதற்கான செலவினை மேலிடம் வழங்கியது. இதைப் போன்று Mission House –ற்காகவும் செலவு செய்தது. இது தவிர சில நாடுகள் உள்ளன. இதில்

26 பள்ளிவாசல்களும் 70 Mission House –களும் கட்டப்பட்டுள்ளன. இதில் ஏறக்குறைய வங்காள தேசத்தில் 2, இந்தியாவில் 40, பிலிப்பைன்ஸில் 1, நோபாளத்தில் 3, கவுதமாலா, மார்சல், ஐஸ்லாந்து ஆகியவற்றிலும் மேலிடம் செலவு செய்துள்ளது.

பிறகு திறமையான மாணவர்களுக்காக ஏறக்குறைய 4500 மாணவர்களுக்கு பல இலட்சம் பவுண்டுகள் ஜமாஅத் ஊக்கத்தொகை அல்லது அழகிய கடனாக கொடுத்துள்ளது. இதில் 350 மாணவர்கள் மேற்படிப்பிற்காக M.Sc., Phd., போன்ற படிப்புகளைப் படிக்கின்றனர். அவர்களின் செலவை ஜமாஅத் ஏற்றுக் கொள்கிறது. இது தவிர ஆப்பிரிக்காவில் தண்ணீர், மின்சாரம், ரேடியோ நிலையம் போன்ற திட்டப்பணிகள் நடக்கின்றன. இவ்வனைத்துப் பணிகளும் மேலிடத்தின் ஒதுக்கீடு மூலம் நடைபெறுகின்றன. ஆக இந்தப் பணிகள் யாவும் ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்காக நடைபெறுகின்றன. உலகத்திற்கு இஸ்லாத்தின் போதனைகளை கொண்டு சேர்ப்பதற்காக நடக்கின்றன. இவையனைத்தும் மனித நேயத்திற்கு தொண்டாற்றும் பணிகளாகும். இந்த எல்லாப் பணிகளிலும் நேரடியாகக் கலந்து கொள்ள முடியாதவர்கள் சந்தாக்கள் கொடுப்பதன் மூலம் கலந்து கொள்கிறார்கள். இந்தப் பணிகளில் தமது பங்கையும் வைப்பதன் மூலம் அல்லாஹ்விடம் நற்கூலி பெறுபவர்களாவர்.

இந்த ஆப்பிரிக்க நாடுகளை நான் கூறினேன். இதில் பல திட்டப் பணிகளை அவர்கள் சொந்தமாகவும் செய்திருக்கிறார்கள். எல்லா செலவுகளுக்கும் மேலிடத்தை மட்டுமே சார்ந்துள்ளது. அவர்கள் சொந்தமாக எதுவும் செய்யவில்லை என நினைக்க வேண்டாம். எனவே நான் இவர்களின் சில சம்பவங்களையும் உங்கள் முன் எடுத்து வைக்கின்றேன்.

கானாவில் Upper West Region –ஐச் சேர்ந்த ஒரு பெண்மணி ஃபாத்திமா தாவூது சாஹிபா அவர்கள் சொந்தமாக நிலம் வாங்கி பள்ளிவாசல் கட்ட ஆரம்பித்து விட்டார்கள். அதில் 300 பேர் தாராளமாக தொழ முடியும். இதே போன்று அக்ரா நகரில் லம்நாரா என்ற கிராமத்தில் அதிகமான பைஅத் நடந்துள்ளது. அங்கு ஜமாஅத் சகோதரர்கள் தமது செலவில் பள்ளிவாசல் கட்டியுள்ளனர். இந்த ஜமாஅத் அங்கு பல இடங்களில் பரவியிருந்தது. எனவே 6 பள்ளிவாசல்கள் கட்ட ஆரம்பித்தனர். அதில் 4 பள்ளிவாசல்கள் முழுமையடைந்துள்ளன. 2 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதில் ஒரு பள்ளிவாசல் சாதிக்கா சாஹிபா என்ற ஒரு பெண்மணி தனியாகக் கட்டியுள்ளார்கள். இதில் 150 பேர் தொழ முடியும். இதற்கு முன் இவர் அக்ரா நகரிலும் பள்ளிவாசலைக் கட்டியுள்ளார்.

**அஹ்மது ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் கானாவின் முபல்லிக் ஆவார். அவர் எழுதுகிறார்:**

மத்திய மண்டலத்திலுள்ள குர்ஸியில் பள்ளிவாசல் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதன் 50% செலவை நமது ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி குவார்க்கு ஜான் சாஹிப் வழங்கியுள்ளார். ஜிப்ரயீல் ஸயீத் சாஹிப் இப்போது உடல்நலமின்றி இருக்கிறார்கள். மருத்துவர்களுக்கு அவரது நோய் என்னவென்று இன்னும் சரியாகப் புரியவில்லை. இவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களுக்கும் முழுமையான உடல் ஆரோக்கியத்தை வழங்குவானாக!

பிரான்ஸின் அமீர் சாஹிப் மெராகாத்திற்கு சுற்றுப்பயணம் செய்தார்கள். அங்கு புதிய அஹ்மதி சகோதரர்களை தியாகம் செய்வதிலும் தூய்மையிலும் நிறைந்தவர்களாக கண்டார்கள். கிலாஃபத்துடன் அன்பும் அதிகமாக கொண்டிருந்தார்கள் என்று எழுதுகிறார். அவர்களுக்கு பொருள் தியாகம் செய்வதைப் பற்றி கூறப்பட்டது மேலும் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கோள்கள் வாசித்துக் காட்டப்பட்டன. அப்போது சில நாட்களுக்குப் பிறகு ஒரு நண்பர் சதர் சாஹிபிடம் வந்தார். ஒரு பெரிய தொகையை சதரிடம் கொடுத்தவாறு கூறினார். இது நான் அஹ்மதி ஆனதிலிருந்து இதுவரை உள்ள எனது சந்தாவாகும். ஏனெனில் சந்தாவைப் பற்றி நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது மேற்கோள் மற்றும் காலத்தின் கலீஃபாவின் அறிவுரையை இதுவரை கேட்டதில்லை. இப்போது கேட்டு விட்டேன். எனவே பின்தங்க மாட்டேன் என்று கூறினார்.

**நைஜரிலிருந்து அஸ்கர் அலி பட்டி சாஹிப் எழுதுகிறார்:**

கடந்த வருடம் அக்டோபர் 2011 -ல் தப்லீக் செய்வதற்காக நான் ஜிதாபராவு என்ற கிராமத்திற்குச் சென்றேன். அங்கு மக்ரிப் தொழுகைக்குப் பிறகு தப்லீக் செய்யப்பட்டது. இசா தொழுகைக்குப் பிறகு எனது சுற்றுப்பயணத்தின் பல்வேறு வீடியோக்களை அவர்களுக்கு காட்டினேன். மாநாட்டையும் காட்டினேன். பள்ளிவாசல்களைப் பற்றிய ஒரு நிகழ்ச்சியையும் காட்டினேன். நமது தப்லீக் முயற்சிகள் பற்றிய நிகழ்ச்சிகளையும் காட்டினேன். இமாம் மஹ்தியின் வருகையின் செய்தியையும் எடுத்துக் கூறினேன். பைத்துல் மால் அமைப்பைப் பற்றியும் எடுத்துக் கூறினேன். இவையெல்லாம் வீடியோவில் இருந்தது. இந்த வீடியோ முடிந்தவுடன் ஒரு இமாம் சாஹிப் எழுந்தார். அவர் ஹவுஸா மக்களைப் பார்த்து ஏதோ கூறினார். பிறகு பள்ளிவாசலை விட்டு வெளியே சென்று விட்டார். எனவே நாங்கள் வருத்தம் அடைந்தோம். ஆனால் கொஞ்ச நேரம் கழித்து அவர் திரும்பி வந்து, இமாம் மஹ்தி வந்து விட்டார். பைத்துல்மால் என்ற அமைப்பு நிறுவப்பட்டு விட்டது என இப்போதுதான் எனக்கு தெரிய வந்தது. நான் இவர்களை வெளியே அழைத்துச் சென்றதன் காரணம் நாமும் இந்த அமைப்பில் பங்கெடுக்க வேண்டும். சந்தாவில் ஒருவருக்கொருவர் முந்திக் கொண்டு பங்கெடுக்க வேண்டும் என்று கூறினார். உடனே அவர் அங்கு சில தொகையை சேகரித்தார். அதை அவர் நமது மிஷினரியிடம் கொடுத்து விட்டு அத்துடன் பைஅத் படிவத்தை நிரப்பினார்.

**உகாண்டாவின் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்:**

செப்டம்பர் 18, 2011-ல் நேசனல் மஜ்லிஸே ஆமிலா மற்றும் பிற தலைவர்களை அழைத்து ஒரு கூட்டம் நடத்தினார்கள். சீத்தாலேண்டின் வளர்ச்சிக்காக மூன்றாண்டுத் திட்டத்தை அவர்கள் முன் வைத்தார். ஏனெனில் இந்த இடத்தை மாநாட்டுத் திடலாக மாற்ற வேண்டும். இந்த இடம் தேசிய தலைமையகம் கம்பாலாவிலிருந்து 9 மைல் தூரத்தில் உள்ளது. இங்கு ஜமாஅத்தின் 17 ஏக்கர் நிலம் உள்ளது. அவர்கள் கூறுகிறார்கள். அந்த கூட்டத்தில் வசதிகள் படைத்த பலர் இருந்தனர். உடனடியாக அவர்கள் வாக்குறுதிகள் அளித்தனர். தொகையைக் கொடுக்க ஆரம்பித்தனர். கென்யாவின் செர்லிங்கிற்கு மதிப்பு குறைவு தான். ஆனாலும் அவர்கள் தமது சக்திக்கேற்ப உடனடியாக 83 மில்லியனுக்கும் அதிகமாக செர்லிங் சேகரித்தார்கள். இது அந்த திட்டப் பணியை முடிப்பதற்காக அவர்கள் செய்தார்கள்.

எனவே பணக்கார நாடுகளிலுள்ள அஹ்மதிகள், ஏழை நாட்டின் செலவுகள் எல்லாம் முழுமையாக தம்மை மட்டுமே சார்ந்திருக்கிறது என்று நினைக்க வேண்டாம். மாறாக, தமது சக்திக்கும் மேலாக இம்மக்கள் தியாகங்கள் புரிகின்றனர்.

நீங்கள் அறிந்திருப்பது போன்று இன்று தஹ்ரீகே ஜதீதின் புதிய வருடம் அறிவிக்கப்பட இருப்பதால் நான் இந்த தியாகங்களின் சம்பவங்களை எடுத்துக் கூறுகிறேன். வழக்கத்திற்கேற்ப கடந்த வருடத்தின் சில குறிப்புகளும் கூறப்படும். எனவே நான் முன்னதாக உங்கள் முன் எடுத்துக்கூறியதன் படி ஓர் அஹ்மதியின் தியாகம் செய்யும் தரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்று கூறியபின் இப்போது நான் கடந்த வருடத்தின் விபரங்களை உங்கள் முன் எடுத்துரைக்கின்றேன்.

அக்டோபர் 31 ஆம் தேதி முடிந்த வருடம் தஹ்ரீகே ஜதீத் சந்தாவின் 78வது வருடமாகும். இப்போது 79வது வருடம் நவம்பர் 1 ஆம் தேதி முதல் தொடங்கி விட்டது. கிடைத்த அறிக்கையின்படி இவ்வாண்டு தஹ்ரீகே ஜதீதின் நிதியாண்டில் இந்த வருடம் **72 இலட்சத்து 15 ஆயிரத்து 700 பவுண்டுகள்** ஜமாஅத் தியாகம் செய்துள்ளது. அல்ஹம்துலில்லாஹ். கடந்த வருடத்தை விட இது ஏறக்குறைய 5 இலட்சத்து 84 ஆயிரத்து 700 பவுண்டுகள் அதிகமாகும். பாகிஸ்தானில் நிலைமை சரியில்லாத போதும், ஏழ்மை இருந்த போதிலும், அதன் தரம் அப்படியே நிலையாக உள்ளது. அதன் பிறகு பெரிய ஜமாஅத்துகளில் (பாகிஸ்தான் தவிர), வெளிநாடுகளின் ஜமாஅத்துகளில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. அதன் பிறகு ஜெர்மனி இரண்டாம் இடத்தில் உள்ளது. பிறகு இங்கிலாந்து மூன்றாம் இடத்திலும், கனடா நான்காவது இடத்திலும், இந்தியா ஐந்தாவது இடத்திலும், இந்தோனேஷியா ஆறாவது இடத்திலும், ஆஸ்திரேலியா ஏழாவது இடத்திலும், சுவிட்சர்லாந்து எட்டாவது இடத்திலும், பெல்ஜியம் 9வது இடத்திலும் உள்ளது. பெல்ஜியம் மற்றும் கானா ஏறக்குறைய பக்கத்தில் அடுத்தடுத்த நிலையில் உள்ளன.

இல்லை. இதில் சிறிய தவறு உள்ளது. இதன் வரிசை கிரமம் இவ்வாறு அமையும். அமெரிக்கா முதலிடத்திலும், இரண்டாவது ஜெர்மனி, மூன்றாவது இங்கிலாந்து, நான்காவது கனடா, ஐந்தாவது இந்தியா, ஆறாவது இந்தோனேஷியா, மத்திய கிழக்கின் ஒரு நாடு உள்ளது. சில காரணத்தைக் கருத்தில் கொண்டு அதன் பெயரை நான் குறிப்பிடமாட்டேன். அது ஏழாம் இடத்தில் உள்ளது. பிறகு, ஆஸ்திரேலியா எட்டவது இடத்திலும், சுவிட்சர்லாந்து ஒன்பதாவது இடத்திலும், பத்தாவது இடத்தில் பெல்ஜியம் மற்றும் கானா உள்ளது. பெல்ஜியம் மற்றும் கானா ஆகிய நாடுகளின் நிலை சுவிட்சர்லாந்திலிருந்து ஏறக்குறைய நெருக்கமாக உள்ளன.

பண மதிப்பின் அடிப்படையில் விகிதாச்சார அளவீட்டின் படி வசூலில் முன்னேற்றம் பெற்றுள்ள முதல் பத்து ஜமாஅத்துகளில் முதலிடம் மத்திய கிழக்கிலுள்ள அந்த அரபு ஜமாஅத் ஆகும். பிறகு ஆஸ்திரேலியா, இந்தியா, ஜெர்மனி, அமெரிக்கா, பெல்ஜியம், கனடா, இங்கிலாந்து, இந்தோனேஷியா. அதன் பின்னர் பிரான்ஸ் ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த நிலையில் உள்ளன. பிரான்ஸ் ஐரோப்பிய ஜமாஅத்துகளில் முதலிடம் வகிக்கிறது.

தனிநபர் சந்தா செலுத்தும் விகிதத்திலும் மத்திய கிழக்கிலுள்ள அந்த நாடு முதலிடத்தில் உள்ளது. இவர்களின் தியாகம் தலைக்கு 156 பவுண்டு என்ற விகிதத்தில் உள்ளது. ஏறக்குறைய 157 பவுண்டுகள் ஆகும். பிறகு அமெரிக்கா தலைக்கு 118 பவுண்டு இரண்டாவது இடம். மூன்றாவது சுவிட்சர்லாந்து, நான்காவது ஜப்பான், ஐந்தாவது இங்கிலாந்து, ஆறாவது பிரான்ஸ், பிறகு கனடா, நார்வே, ஜெர்மனி, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த நிலைகளில் உள்ளன.

இவ்வாறு தொகையில் மட்டும் முன்னேற்றம் ஏற்படவில்லை. மாறாக அல்லாஹ்வின் அருளால் தஹ்ரீகே ஜதீதில் புதிதாக இணைந்துள்ள தூய அஹ்மதிகளின் எண்ணிக்கையிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் பேர் ஆவர். இவ்வாறு 9 இலட்சத்து 11 ஆயிரம் பேர் மொத்தம் தஹ்ரீகே ஜதீத் சந்தா செலுத்துபவர்கள் உள்ளனர். கடந்த ஆண்டு இந்த எண்ணிக்கை 7 இலட்சத்து 31 ஆயிரமாக இருந்தது.

ஆப்பிரிக்காவின் ஜமாஅத்துகளில் வசூலின் அடிப்படையில் கானா முதலிடத்திலும், நைஜீரியா, மொரீஷியஸ், புர்கினோஃபாஸோ, கென்யா, பெனின், உகாண்டா, தன்ஸானியா, கேம்பியா, செரால்யூன் ஆகிய ஜமாஅத்துகள் முறையே முதல் 10 இடங்களை வகிக்கின்றன. இவை ஏழை நாடுகள் ஆகும். எனவே தான் நான் இதை தனியாக எடுத்து கூறினேன். ஆனால் தியாகத்தில் மிகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

புதிதாக இணைபவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியதில் நைஜீரியா ஆப்பிரிக்க நாடுகளில் மட்டுமல்ல. மாறாக முழு உலகிலும் உள்ள நாடுகளை விட முன்னிலையில் உள்ளது. இவ்வாண்டு அவர்கள் 64 ஆயிரத்து 419 பேரை புதிதாக தஹ்ரீகே ஜதீத் சந்தா கொடுப்பவர்களாக சேர்த்துள்ளார்கள். இவ்வாறு எண்ணிக்கைகளில் அபாரமான முன்னேற்றத்தைக் கண்டதுடன் நைஜீரியாவின் மொத்த எண்ணிக்கை பாகிஸ்தானுக்குப் பிறகு இரண்டாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. ஒன்றரை இலட்சம் பேர் அதிகமாக பங்கு பெற்று உள்ளனர். இவ்வாறு எண்ணிக்கையை உயர்த்திய ஆப்பிரிக்க ஜமாஅத்துகளில் நைஜர், பெனின், புர்கினோஃபாஸோ, செரால்யூன் ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்கவை. கானாவும் இவ்விசயத்தில் முன்னேற முயற்சி செய்ய வேண்டும்.

தஃப்தர் அவ்வலின் மொத்த முஜாஹிதீன்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 927 ஆகும். இதில் 285 பேர் இறைவனின் அருளால் உயிருடன் உள்ளவர்கள். அவர்கள் தமது சந்தாவை தாமே செலுத்துகின்றனர். மீதமுள்ளவர்களின் வாரிசுகள் அவர்களது பெயரில் சந்தா செலுத்தி வருகின்றனர்.

பாகிஸ்தானின் மொத்த வசூலின் அடிப்படையில் மூன்று பெரிய ஜமாஅத்துகளில் முதலாவதாக லாஹூர், இரண்டாவதாக ரப்வா, மூன்றாவதாக கராச்சி உள்ளது. இது தவிர நகர்ப்புற ஜமாஅத்துகளில் அதிகமாக தியாகம் செய்யும் ஜமாஅத்துகளில் முதல் 10 இடங்களை வகிக்கும் ஜமாஅத்துகளில் முதலில் ராவல்பிண்டி, இஸ்லாமாபாத், ஸியால்கோட், கொய்ட்டா, சர்கோதா, ஃபைஸலாபாத், மீர்பூர்காஸ், நவாப்சா, பெசாவர் மற்றும் பஹாவல்பூர் ஆகிய ஜமாஅத்துகள் முறையே முதல் 10 இடங்களை வகிக்கின்றன.

மாவட்ட அளவில் அதிகமாக சந்தா கொடுக்கும் மாவட்டங்கள் முதலில் உமர்கோட், சேகுபூரா, குஜ்ரான்வாலா, பதீன், சாங்கட், நாரோவால் சாங்கட், ஹைதராபாத், ரஹீம்யார்கான், மீர்பூர் ஆஸாத் கஷ்மீர் மற்றும் சானேவால் ஆகிய மாவட்டங்கள் முறையே முதல் 10 இடங்களை வகிக்கின்றன.

அமெரிக்காவில் பொருள் தியாகம் செய்யும் ஜமாஅத்துகளில் முதல் 5 இடங்களை வகிக்கும் ஜமாஅத்துகளின் பெயர் லாஸ் ஏஞ்சலஸ், இன்பண்டு எம்பெயர், கொலம்பஸ் ஒஹாயோ, ஸிலிகான் வேலி, டெட்ராயிடு மற்றும் ஹாரிஸ்பெர்க் ஆகிய ஜமாஅத்துகள் முறையே முதல் 5 இடங்களை வகிக்கின்றன.

ஜெர்மனியில் வசூலின் அடிப்படையில் குலோன், டொடர்மார்க், நோயஸ், கோப்லன், ஃப்ளோரிசைம், மெஹ்தி ஆபாத், பிராயிஷ் ரவுன்ஹேம் தெற்கு, ஃபுல்டா மற்றும் வொயின்கார்டன் ஆகிய ஜமாஅத்துகள் முன்னணியில் உள்ளன. வசூலின் அடிப்படையில் முதல் 10 அமாரத் ஜமாஅத்துகள் முதலில் இவை சதாரத் ஜமாஅத்தாக இருந்தன. இதில் ஹெம்பர்க், ஃபராங்க் ஃபர்ட், கிராஸ் கிராவு, டிராம்ஸ்டட், ஈஸ்பார்டன், மான்ஹைம், டுவிஸ்டன்பார்க், சூஃபன்பாக் மற்றும் ரியிட்ஸடட் ஆகிய ஜமாஅத்துகள் முறையே முதல் 10 இடங்களை வகிக்கின்றன.

மொத்த வசூலின் அடிப்படையில் உங்களுடைய, அதாவது U.K. வின் முதல் 10 ஜமாஅத்துகளில் மஸ்ஜித் ஃபஸ்ல் முதலிடத்திலும், நியூ மால்டன், வெஸ்ட் ஹில், வொர்செஸ்டர், பைத்துல் ஃபுதூஹ், ரெயின்ஸ் பார்க், மாங்க்வெஸ்ட், சீம், மான்செஸ்டர் தெற்கு, மத்திய பெர்மிங்ஹாம் ஆகிய ஜமாஅத்துகள் முறையே முதல் 10 இடங்களை வகிக்கின்றன.

மண்டலங்களின் அடிப்படையில் முதலில் இலண்டன், இரண்டாவது மிட்லாண்டு, மூன்றாவது நார்த் ஈஸ்ட் உள்ளது. சிறிய எண்ணிக்கையிலுள்ள சிறிய ஜமாஅத்துகளில் ஸ்கென்தாஃப், பிரோம்லி, லெவிசம், போர்மோத், பிர்மிங்டன் பார்க், ஆக்ஸ்போர்ட் ஆகியவை உள்ளன.

வசூலின் அடிப்படையில் கனடாவின் குறிப்பிடத்தக்க ஜமாஅத்துகள், கெல்கிரி, எட்மின்டன், பீஸ் வில்லேஜ் ஈஸ்ட், சரே ஈஸ்ட், பீஸ் வில்லேஜ் சென்டர், வுட்பிரிஜ் பிரம்டன், ஃபிளவர் டவுண், மிஸ்ஸாகா வெஸ்ட், வாகன் நார்த், மேப்பில், மவுண்ட் ரியாஸ் ஈஸ்ட் ஆகிய ஜமாஅத்துகள் உள்ளன.

இந்தியாவின் முதல் 10 மாவட்டங்களில் முதலாவதாக கேரளா, தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், ஜம்மு காஷ்மீர், வங்காளம், கர்நாடகா, ஒரிஸா, பஞ்சாப், டெல்லி மற்றும் உ.பி. ஆகியவை முறையே முதல் 10 இடங்களில் உள்ளன. தியாகம் செய்யும் ஜமாஅத்துகளில் முதல் 10 இடங்களை வகிக்கும் ஜமாஅத்துகளில் முதலிடம் கோயம்புத்தூர் – தமிழ்நாடு, இரண்டாவது கருளாயி – கேரளா, கோழிக்கோடு – கேரளா, ஹைதராபாத் – ஆந்திரா, காதியான் ஐந்தாவது இடம். கன்னனூர் டவுண் – கேரளா ஆறாவது இடம், கொல்கத்தா, பயங்காடி, மாத்தோட்டம் – கேரளா, சென்னை – தமிழ்நாடு ஆகியவை முறையே முதல் 10 இடங்களை வகிக்கின்றன.

தஹ்ரீகே ஜதீத் தொடர்பாக சில சம்பவங்களை ஜமாஅத்துகள் எழுதியுள்ளன. அதையும் நான் உங்கள் முன் வைக்கிறேன். குமாஸியில் அஹ்மது ஜிப்ராயில் ஸயீத் சாஹிப் கூறுகிறார்கள். இவர்களிடம் நான் எண்ணிக்கையை அதிகப்படுத்துமாறு கூறியிருந்தேன். கானாவின் எண்ணிக்கை குறைந்தது ஒரு இலட்சம் இருக்க வேண்டும் என்று கூறியிருந்தேன். கானாவின் எண்ணிக்கை குறைந்தது ஒரு இலட்சம் இருக்க வேண்டும் ன்று கூறியிருந்தேன். இந்த இலக்கை அவர்கள் அடையவில்லை. அஹ்மதி அன்பர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்கெடுத்தனர். ஆனால் இங்கும் முயற்சி முழுமையாக செய்யப்படவில்லை. இன்னும் சற்று கவனமூட்டியிருந்தால் இந்த எண்ணிக்கை இன்னும் அதிகமாகி இருக்கும்.

**கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:**

ஃபாரா பீன் பகுதியின் மிஷ்னரி கூறினார். ஒருமுறை ஒரு மூதாட்டி மிசன் ஹவுஸுக்கு வந்தார். அவர் நமது முபல்லிக்கிடம் ஃபாரா பீன் பகுதியில் தஹ்ரீகே ஜதீத் சந்தா மிக அதிகமாக யார் கொடுக்கிறார்? என்று கேட்டார். இந்தப் பகுதியில் ஒரு சம்பூ ஜான் சாஹிப் என்று ஒருவர் உள்ளார். அவர் அதிகமாக சந்தா கொடுப்பவர் ஆவார் என்று கூறப்பட்டது. அவர் எவ்வளவு சந்தா கொடுக்கிறார் என்று அந்த மூதாட்டி கேட்டார். அவர் 50,000

டெலாஸி கொடுக்கிறார் என்று முபல்லிக் சாஹிப் கூறினார். இந்த பெண்மணி இதற்கு முன் 1500 டெலாஸி கொடுத்து வந்தார். அவர் கூறினார். என்னிடம் இவ்வளவு தொகை செலுத்துவதற்கு வசதி இல்லை. எனினும் நான் இந்த மனிதருடன் போட்டி போடுவேன். இறைவனின் அருளால் இவரை விட அதிகமாக சந்தா செலுத்துவேன் என்று கூறினார்.

**ஸ்பெயினின் அமீர் சாஹிப் எழுதுகிறார்கள்:**

புதிதாக பைஅத் செய்த வஃபாவுர் ரஹ்மான் சாஹிபா என்ற பெண்மணி என்னுடைய கடந்த வருட தஹ்ரீகே ஜதீத் குத்பாவை கேட்டார்கள். அப்போது 500 யூரோக்கள் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். அதை உடனடியாக செலுத்தியும் விட்டார்கள். அவர்கள் தஹ்ரீகே ஜதீத் சந்தாவை செலுத்திய பிறகு அவர்களுக்கு பிற சந்தாக்களின் விபரமும் எடுத்துக் கூறப்பட்டது. நீங்கள் இப்போது புதிதாக பைஅத் செய்துள்ளீர்கள். எனவே உங்கள் மீது கட்டுப்பாடு ஏதுமில்லை. நீங்கள் விரும்பிய அளவு எவ்வளவு முடியுமோ அதை மட்டும் கொடுத்தாலே போதும் என்று கூறப்பட்டது. ஆனால் அவர்கள் அந்த நாளே பிற சந்தாக்களையும் விகிதாச்சாரத்தின்படி செலுத்தி விட்டார்கள். கட்டாயச் சந்தா மற்றும் ஜல்ஸா ஸாலானாவின் சந்தாக்களையும் செலுத்தி விட்டார்கள்.

**சுவிட்சர்லாந்திலிருந்து நமது முபல்லிக் இன்சார்ஜ் சாஹிப் எழுதுகிறார்:**

நியூஸட்டில் ஜமாஅத்தின் தலைவர் தஹ்ரீகே ஜதீத் செயலர் ஆவார்கள். அவர் சுவிட்சர்லாந்து வந்து அடைக்கலம் கேட்ட போது உடனடியாக சம்பந்தப்பட்ட துறை அதை இரத்து செய்து விட்டது. அப்போது தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டு அறிவிக்கப்பட்டது. அவர்களின் கணக்கில் மொத்தம் 1000 ஃபிராங்க் இருந்தது. இந்தத் தொகையை அவர்கள் வக்கீல்கள் மற்றும் பிற செலவுகளுக்காக வைத்திருந்தார்கள். ஆனால் தஹ்ரீகே ஜதீதின் புதிய ஆண்டின் அறிவிப்பைக் கேட்டு அவர்கள் மொத்த தொகையையும் இறைவன் மீது நம்பிக்கை வைத்தவாறு சந்தாவாக செலுத்தி விட்டார்கள். அல்லாஹ்விடம் துஆ செய்தார். உண்மையில் மிகச் சிறந்த பாதுகாவலன் அவனே ஆவான். அவனே நமது எல்லாப் பணிகளையும் சீர் செய்பவனாவான் என்று கூறி துஆ செய்தார்கள். சந்தாவின் அருளால் அல்லாஹ் இவர் மீது கருணை காட்டினான். அவருக்கு மறைமுகமாக உதவி புரிந்தது மட்டுமின்றி அடைக்கலம் கேட்டு அவர்கள் விண்ணப்பித்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அவருக்கு அந்த நாட்டின் குடியுரிமையும் கிடைத்து விட்டது. இதற்காக வக்கீல்கள் நியமிக்க வேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

**கிரிகிஸ்தானிலிருந்து நமது முபல்லிக் எழுதுகிறார்கள்:**

கிரிகிஸ்தான் நண்பர் ஒருவர் ஜுமார்த் சாஹிப் 2006 -ல் பைஅத் செய்தார். இவர் மிகவும் நேர்மையான மனிதர் ஆவார். பைஅத் செய்தவுடன் நமது முபல்லிக் சந்தாவைப் பற்றி இவருக்கு புரிய வைப்பதற்காக நகைச்சுவையாக கூறியுள்ளார்கள். பிறர் தமது ஜமாஅத்தில் மக்களை சேர்ப்பதற்காக பணம் கொடுக்கிறார்கள். ஆனால் நமது ஜமாஅத்தில் சேர்பவரிடம் நாங்கள் பணம் வசூல் செய்கிறோம் என்று கூறினார்கள். அதற்கு அவர் மாதந்தோறும் 300 கிரிகிஸ் சந்தா ஆம் செலுத்துவேன் என்று கூறினார். சில காலத்திற்குப் பிறகு அதை 400 ஆக உயர்த்தினார். பிறகு இன்னும் கொஞ்ச காலம் கடந்த பிறகு 800 ஆக உயர்த்தினார். அதன் பிறகு கொஞ்ச காலம் கழிந்த பிறகு யாரும் எதுவும் கூறாமலேயே 1000 சும் மாதந்தோறும் செலுத்த ஆரம்பித்து விட்டார்.

தஹ்ரீகே ஜதீதின் வாக்குறுதியை செலுத்தும் போது அவர் பைஅத் செய்து சில நாட்கள் தான் ஆகியிருந்தது. அப்போது அவர் 1000 சும் எழுதினார். இந்த தொகை அவரது பொருளாதார நிலையில் அவருடைய தகுதிக்கு மிகவும் அதிகமாகும். சிறிய தொகை எழுதினால் போதும். பிறகு இதை மெல்ல மெல்ல உயர்த்தலாம் என்று அவர்களுக்கு கூறப்பட்டது பிறகு நன்கு புரிய வைத்த பிறகு தான் அவர் இந்த தொகையை சிறிது குறைத்தார்.

**அயர்லாந்து ஜமாஅத்தின் தலைவர் எழுதுகின்றார்கள்:**

ஒரு இளம் தம்பதியினர் தமக்கு குழந்தை பிறந்தால் அவர்கள் ஜமாஅத்திற்கு அர்ப்பணிப்பேன் என முடிவு செய்தார்கள். அவர்கள் தமது குழந்தைகளுக்கு பெயரும் யோசித்து வைத்திருந்தனர். அப்போது வரை

அவரது மனைவி குழந்தை உண்டாகவில்லை. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவர்கள் தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதில் இந்த இரண்டு குழந்தைகளின் பெயரில் சந்தா கொடுத்தனர். அதில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஆவர். அவர்கள் செய்த தியாகத்திற்கு இறைவன் அவர்களுக்கு வழங்கிய பரிசு என்னவென்றால் சில வாரங்களுக்குப் பிறகு அவரது மனைவி குழந்தை உண்டானது தெரிய வந்தது. மேலும் அவர்களுக்கு இரட்டைக் குழந்தை பிறக்கும் என்றும் தெரிய வந்தது. இறைவன் ஆரோக்கியமான இரட்டைக் குழந்தைகளை அவர்களுக்கு வழங்கினான். குழந்தைகளின் பெயரில் சந்தா கொடுத்ததன் விளைவாகத்தான் இறைவன் அவர்களுக்கு இரட்டைக் குழந்தைகளை வழங்கினான் என்பது அந்த தம்பதிகளின் உறுதியான நம்பிக்கையாகும்.

**இந்தியாவின் அறிக்கை வந்துள்ளது. கோயம்புத்தூர் ஜமாஅத்தின் தலைவர் எழுதுகிறார்:**

தஹ்ரீகே ஜதீதின் சந்தாவில் எனது சக்திக்கு மீறிய அளவில் அதிகரித்ததன் காரணமாக அல்லாஹ் எனக்கு அற்புதமான வகையில் தனது வல்லமையால் ஈமானை வலுவூட்டும் இரண்டு சம்பவங்களைக் காட்டினான். இந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என இறைவனின் சந்நிதானத்தில் நான் தொடர்ந்து துஆ செய்து வந்தேன். திடீரென்று ஒரு நபர் எனது கடைக்கு வந்தார். என்னிடம் இருந்த பொருட்களை அதன் அசல் விலையை விட அதிக விலைக்கு வாங்கினார். இதன் விளைவாக எனது வாக்குறுதியை உடனடியாக பூர்த்தி செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது.

பிறகு கூறுகிறார்கள்: அதே நேரத்தில் எங்களது ஊரின் (கிட்டங்கி) குடோன் திடீரென்று தீ பிடித்து விட்டது. அதில் எனது சரக்கும் பெருமளவில் வைக்கப்பட்டிருந்தது. நான் துஆ செய்து விட்டு அங்கு சென்றேன். அதை பார்த்ததும் எனது ஆச்சரியத்திற்கு அளவே இல்லை. அங்கு வைக்கப்பட்டிருந்த பிற வியாபாரிகளின் எல்லா சரக்குகளும் எரிந்து சாம்பலாகி இருந்தது. அல்லாஹ்வின் அருளால் எனது சரக்கு மிகவும் பாதுகாப்பாக இருந்தது. அந்த சரக்கு மண்டியின் கூரையில் இருந்த இரும்பு கூட உறுகிவிடும் அளவுக்கு நெருப்பு மிகவும் கடுமையாக இருந்தது. இந்தப் பகுதி முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் மையப்பகுதியாகும். இவர்கள் எப்போதும் நம்மை எதிர்ப்பதில் மும்முரமாக இருப்பார்கள். ஆனால் இந்த சம்பவத்திற்குப் பிறகு அவர்கள் அனைவரும் எனக்கு மரியாதை கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். இது சந்தா கொடுப்பதனால் கிடைத்த சிறப்புகளாகும். நான் இந்த சம்பவத்தை எண்ணும்போதெல்லாம் எனது உள்ளம் நன்றியை துதிக்க ஆரம்பித்து விடுகிறது.

**பிறகு தஹ்ரீகே ஜதீதின் இன்ஸ்பெக்டர் S.M. பஷீருத்தீன் சாஹிப் எழுதுகிறார்கள்:**

நான் ஜமாஅத்தே அஹ்மதிய்யா காவாரத்தி – லக்ஷ்தீப் சென்றேன். அங்குள்ள அமீர் சாஹிபின் தலைமையில் நடந்த ஒரு தர்பிய்யத் கூட்டத்தில் நான் தஹ்ரீகே ஜதீதின் முக்கியத்துவம் மற்றும் அருள்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினேன். கூட்டத்திற்குப் பிறகு எல்லா சகோதரர்களும் தமது வாக்குறுதியை கணிசமான அளவு உயர்த்தி எழுதினார்கள். இந்தக் கூட்டத்தில் திரைக்குப் பின்னால் பெண்களும் இருந்தனர். அவர் கூறுகிறார். அடுத்த நாள் அங்கிருந்து நடந்து வேறு ஊருக்குச் சென்றேன். அப்போது காவாரத்தியின் அமீர் சாஹிப் போனில் கூறினார்கள். அங்குள்ள ஓர் அஹ்மதி பெண்மணி மதிப்பிற்குரிய பீபி சாஹிபா நீங்கள் ஆண்களிடம் தஹ்ரீகே ஜதீதின் வாக்குறுதியை பெற்றுள்ளீர்கள். பெண்களை இதிலிருந்து விலக்கி விட்டீர்கள் என்று புகார் கூறியதாக கூறினார்கள். இன்று நான் தஹ்ரீகே ஜதீதின் சந்தாவின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளேன். நான் எழுதிய வாக்குறுதி குறைவானது என்று எனது உள்ளம் கூறுகிறது. எனவே எனது வாக்குறுதியை இரட்டிப்பாக ஆக்கி விடுங்கள் என்றார். இந்தப் பெண்மணி மிகவும் தூயவர் ஆவார். ஆறு வருடங்களுக்கு முன் இவர் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டுள்ளார்.

**ஆந்திர பிரதேசத்தின் முஹம்மது சாஹிப் இன்ஸ்பெக்டர் எழுதுகிறார்கள்:**

சிக்கந்தராபாத் ஜமாஅத்தின் ஒரு தூய அஹ்மதி பெண்மணி தஹ்ரீகே ஜதீதின் அத்தியாத்தில் பொருள் தியகத்தின் ஒரு புதிய முன்மாதிரியை நிலைநாட்டியள்ளார்கள். கடந்த வருடம் இவரது கணவர் இருதய நோயின் காரணமாக மிக நீண்ட காலம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்கள். மிக அதிகமான பொருளாதார நெருக்கடியன் காரணமாக தஹ்ரீகே ஜதீத் சந்தாவை கொடுக்க முடியாமல் இருந்தார்கள். அவர்களது மகளின்

திருமணமும் விரைவில் நடக்கவிருந்தது. தஹ்ரீகே ஜதீத் செயலர் அவருடைய மனைவிக்கு சந்தாவை செலுத்துமாறு கவனமூட்டினார். இதனால் அநதப்பெண் உடனடியாக பணத்தை கொடுத்து சந்தாவை செலுத்தினார். மேலும் இதைப் பற்றி எனது கணவனுக்கு தெரிவிக்க வேண்டாம். ஏனெனில் இந்த பணத்தை நான் எனது மகளின் திருமணத்திற்காக அன்பளிப்புகளிலிருந்து அவருடைய அனுமதியுடன் தந்திருக்கிறேன் என்றார்கள்.

இவ்வாறு தியாகம் செய்பவர்களுக்காக அங்குள்ள ஜமாஅத் உடினயாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். ஜமாஅத்தே அஹ்மதிய்யா கோயம்புத்தூரின் இரண்டு தூய இளைஞர்கள் சேர்ந்து வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் எழுதுகிறார்கள். கடந்த வருடம் எங்களுடைய தஹ்ரீகே ஜதீதின் சந்தாவின் வாக்குறுதி ஒவ்வொருவருக்கும் 10,000 ரூபாயாக இருந்தது. இவ்வாண்டு நாங்கள் எங்களுடைய வாக்குறுதியை ஒவ்வொருவரும் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தினோம். சந்தாவின் வாக்குறுதியை நிறைவேற்ற வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று துஆவிற்காக எனக்கும் இவர்கள் கடிதம் எழுதினார்கள். வியாபாரம் மிகவும் மோசமாக இருந்தது. ஆனால் அல்லாஹ் அருள் புரிந்தான். ஒரு வியாபாரம் நடந்தது. அதில் இரண்டு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் முழுமையாக இலாபம் கிடைத்தது. இருவரும் தமது வாக்குறுதியை நிறைவேற்றி விட்டனர்.

சமாடா சர்கிள் ராஜஸ்தானின் ஓர் அஹ்மதி பெண் ஊர் மக்களின் ஆடுகளை மேய்த்து அந்த வருமானத்திலிருந்து வாழ்ந்து வருகிறார். அவரது பெயர் ஸமீரி பேகம். தஹ்ரீகே ஜதீத் சந்தாவை அவர்களிடம் கேட்ட போது கூலித்தொகை மற்றும் முன்னதாக அவரது பையிலிருந்து அனைத்து தொகையையும் கொடுத்து விட்டார். நான் ஏற்கனவே கூறியது போன்று பணக்காரர்களை ஒப்பிடுகைளில் ஏழைகள் தியாகம் செய்யும் தரம் மிகவும் உயர்ந்து காணப்படுகிறது.

இவ்வாறே ஜமாஅத்தே அஹ்மதிய்யா நாமானா சர்கிள் குவெட்டாவில் ஒரு புதிய அஹ்மதிப் பெண்ணிடம் தஹ்ரீகே ஜதீத் சந்தா கேட்ட போது தனது 14 வயது மகளிடம் 50 ரூபாய் கொடுக்குமாறு கூறினார். ஆனால் அவள், என்னிடம் 100 ரூபாய் உள்ளது. அதை நான் சந்தாவாக கொடுப்பேன் என்று கூறி தாய் தடுத்த போதிலும் மகள் 100 ரூபாய் சந்தா கொடுத்து விட்டார்.

அல்லாஹ்வின் அருளால் இந்த பொருள் தியாகம் செய்பவர்களின் தரம் மிக அதிகமாக உயர்ந்துள்ளது. மேலிடம் அங்கு அதிகமாக செலவு செய்கிறது. எனினும் அவர்கள் தமது சொந்தக்காலில் நிற்க முயற்சி செய்கிறார்கள். அல்லாஹ் திகாகம் செய்கின்ற இந்த எல்லாருடைய செல்வத்திலும் உயிரிலும் எல்லையில்லா அபிவிருத்தியை வழங்குவானாக! பணக்காரர்களும், பணக்கார ஜமாஅத்துகளும் தமது பலவீனமான சகோதரர்களை எப்போதும் தம்முடன் சேர்த்து முன்னேற்றவும், ஜமாஅத்தின் வளர்ச்சியின் ஆன்மாவை எப்போதும் நிலைநாட்டுபவர்களாகவும் இருப்பார்களாக! அல்லாஹ் அவ்வாறே செய்வானாக! இதனால் இஸ்லாத்தின் உண்மையான போதனை உலகில் நடைமுறைக்கு வர வேண்டும். ஏனென்றால் நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து காலடியை முன்னெடுத்து வைத்தால் இந்த முறையில் உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையைக் கொண்டு சேர்க்க முடியும். இஸ்லாமிய சமுதாயம் ரஸூல் (ஸல்) அவர்களின் உண்மை நேசரை அடையாளம் கண்டு கொள்ளும் நல்வாய்ப்பைப் பெற வேண்டும். இதனால் உலகில் உண்மையான சகோதரத்துவம் மற்றும் நேசத்தின் சூழ்நிலை நிலைபெற வேண்டும். மேலும் ரஸூல் (ஸல்) அவர்களின் கொடி முழு உலகிலும் பறக்க வேண்டும். அல்லாஹ் அவ்வாறே செய்வானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
**HADHRAT KHALIFATUL MASIH V**
AT BAIT-UL-FUTUH MOSQUE, LONDON.
**ON 09.11.2012**

Translated by : Maulavi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456